# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் - 07 | தமிழ்மொழி | 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

➢ **இவ்வினாத்தாளுக்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதுக.**
**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01) சேர மன்னன் பார்போற்ற ஆட்சி செய்தான். என்பதில் பார் என்பதன் ஒத்த கருத்தச் சொல்
(1) சபை (2) பூமி (3) நாடு (4) சுற்றம்

02) நாம் சுற்றுபுறத்தைச் சுத்தமாகப் பேணுதல் வேண்டும். சுத்தம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) அசுத்தம் (2) தூய்மை (3) நன்மை (4) ஆக்கம்

03) பாரதியார் பாடல்களில் உற்சாகம் கரைபுரண்டு ஓடும். இங்கு உற்சாகம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) இறுமாப்பு (2) வீரம் (3) சோம்பல் (4) துணிவு

04) "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" இங்கு வந்தனை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) நிந்தனை (2) சிந்தனை (3) வணக்கம் (4) மரியாதை

05) களிறு என்பதன் எதிர்ப்பாற் சொல் யாது?
(1) பிணை (2) நாகு (3) பசு (4) பிடி

06) தமிழில் உள்ள நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை
(1) 95 (2) 07 (3) 126 (4) 133

07) பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்துக்களை மட்டும் கொண்ட தொகுதி
(1) ஸ, ட (2) ஐ, ந (3) ஹ, ஸ்ரீ (4) த, ஷ

08) பின்வருவனவற்றுள் அடுக்குத் தொடராக அமைவது.
(1) நறநற (2) பெரிய பெரிய (3) பளபள (4) சலசல

09) இரும்பொறை வேந்தனது இனிய செயல்தான் என்னே.... இதில் இடவேண்டிய நிறுத்தக்குறி
(1) அரைப்புள்ளி (2) வினாக்குறி (3) முற்றுப்புள்ளி (4) வியப்புக்குறி

10) "ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்று" என்னும் பாடலை சுவாமி விபுலாநந்தர் இயற்றியுள்ளார். இவ்வாக்கியத்தின் எழுவாய்
(1) ஈசன் (2) இன்மலர்கள் (3) விபுலாநந்தர் (4) பாடல்

11) பின்வருவனவற்றுள் கேட்போனைச் சுட்டும் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்
(1) தன்மைப்பெயர் (2) முன்னிலைப்பெயர் (3) படர்க்கைப்பெயர் (4) தொழிற்பெயர்

12) ஈ-மெயில் (E-mail) என்பதன் கலைச்சொல்
(1) இணையம் (2) தொலைநகல் (3) மின்னஞ்சல் (4) அரசன்

13) கணவன், இறைவன், வீடு ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
(1) தலைவன் (2) பதி (3) நட்பு (4) அரசன்



kalvi.lk

14) பின்வருவனவற்றுள் ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவாக அமையும் சொல்
(1) பாங்கி (2) நீதிபதி (3) குறவன் (4) தேவி

15) கடலும் கிணறும் என்ற சிறுகதையை எழுதியவர்
(1) கி.வா.ஜகந்நாதன் (2) குப்புசாமி ஆழ்வார்
(3) நெ.து. சுந்தரவேலு (4) அழக சுந்தர தேசிகர்

16) உறவுமுறைக் கடிதம் ஒன்றில் இடம்பெறாத உறுப்பு
(1) ஒப்பம் (2) தலைப்பு (3) விளிப்பு (4) செய்தி

17) அவன் கொழும்புக்குப் போனான் என்பது
(1) இறந்த காலம் (2) எதிர்காலம் (3) நிகழ்காலம் (4) கூறமுடியாது

18) கூறமுடியாத நிலையிலிருத்தல் என்பதை விளக்கும் உவமைத் தொடர்
(1) கடன்பட்டார நெஞ்சம் போல
(2) கனியிருக்கக் காய் கவருவது போல
(3) ஊமை கண்ட கனவு போல
(4) வாடும் பயிருக்கு வான்மழை போல

19) இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
(1) வெள்ளிவிழா (2) பொன்விழா (3) மணிவிழா (4) அமுதவிழா

20) ஆந்தை அலறும் என்பது போல, குரங்கு
(1) உறுமும் (2) அலட்டும் (3) கத்தும் (4) அலப்பும்

**(20x1 ½ = 30 புள்ளிகள்)**

## பகுதி - II

- **முதலாம், இரண்டாம், மூன்றாம் நான்காம் வினாக்களுக்கும் ஐந்தாம், ஆறாம் ஏழாம் வினாக்களுள் ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**01) வகுப்பறையில் நீர் மேற்கொண்ட செயும்முறைக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**

(1) இக்கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பாட அலகு யாது?
(2) இக்கணிப்பீட்டிற்கான தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்?
(3) இக்கணிப்பீட்டை மேற்கொள்வதற்கு ஆசிரியர் வழங்கிய அறிவுரைகள் மூன்று தருக.
(4) இக்கணிப்பீட்டினால் நீர் அடைந்த நன்மைகள் 3 தருக.

**(4x3=12 புள்ளிகள்)**

**02) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(1) உழவுத் தொழிலின் சிறப்பு
(2) நான் விரும்பும் பெரியார்
(3) சூழலைப் பாதுகாப்போம்
(4) புத்தகத்தின் சுயசரிதை

**(18 புள்ளிகள்)**


kalvi.lk

**03)** அறம் செய்வதால் கிடைக்கும் பயன்கள் பற்றி 75 சொற்களில் அமையுமாறு உமது நண்பருக்குக் கடிதம் எழுதுக.

**(15 புள்ளிகள்)**

**04)** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(1) தமிழ்த் தட்டச்சின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

(2) வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட மன்னன் யார்?

(3) பென்சில் செய்வதற்குப் பயன்படும் பொருட்கள் ஐந்தினைத் தருக.

(4) 'தாயினும் நல்ல தயைவுடைய நல்லாள்' யார்?

(5) ஈசன் உவக்கும் இன்மலர்ள் மூன்றும் எவை?

(6) 'கடலும் கிணறும் என்ற கட்டுரை இடம்பெற்ற நூல் எது?

**(6x2 ½ = 15 புள்ளிகள்)**

**05)** பின்வரும் பாடலை நன்கு வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

தென்னை மரக்கிளை மீதில் - அங்கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்
சின்னஞ்சிறிய குருவி - அது
'ஜிவ்' என்று விண்ணிடை ஊசல் சிட்டேகும்
மன்னப் பருந்தோரிரண்டு - மெல்ல
வட்டமிட்டுப் பின் நெடுந்தொலை போகும்.

பின்னர் தெருவிலோர் சேவல் - அதன்
பேச்சிலே "சக்திவேல்" என்று என்று கூவும்
செவ்வொளி வானில் மறைந்தே - இறந்தே
நிலவெங்கும் பொழிந்தது கண்டீர்.

**(பாரதியார்)**

(1) பசுங்கிளி எங்கு காணப்பட்டது?

(2) குருவி எங்கே செல்கிறது?

(3) சேவல் எவ்வாறு கூவுகிறது?

(4) இங்கு இடம்பெற்றுள்ள அடுக்கிடுக்குத் தொடர் ஒன்று தருக.

(5) பிரித்தெழுதுக.

1. பசுங்கிளி    2. மரக்கிளை

**(10 புள்ளிகள்)**



kalvi.lk

**06) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஆதிகாலத்தில் மனிதன் குகையில் வாழ்ந்தான். குகை வாழ்க்கை சிரமம் மிக்கதாகவும் அபாயம் நிறைந்ததாகவும் இருந்தது. அவன் பயன்படுத்திய படைக்கலங்கள் மரத்தாலோ, எலும்பாலோ, கல்லாலோ ஆக்கப்பட்டவையாக இருந்தன. குளிரிலிருந்தும் மழையிலிருந்தும் பாதுகாப்புப் பெற அவன் ஒதுங்கவேண்டிய இடம் குகை ஒன்றேதான். அவன் அணிந்துகொண்ட ஆடையோவிலங்குகளின் தோலாக மட்டுமே இருந்தது. அவன் மேற்கொண்ட வேட்டை பயன்தராது போனால் பட்டினியாகவே இருக்கவேண்டி இருந்தது. நாடோடியாக வாழ்ந்த அவன் இடத்துக்கிடம் சென்று காய்கனிகளைப் பறித்துச் சேர்த்தும் வேட்டையாடியும் உண்டான். அவன் வேட்டையாடிய விலங்கைத் துரத்தி அதன் சுவட்டைப் பின்பற்றிச் சென்ற போது முன்பின் அறியாத இடத்திற்குச் செல்லவேண்டியும் வந்தது.

(1) ஆதிமனிதனின் குகை வாழ்க்கை எத்தகையதாக இருந்தது?

(2) ஆதி மனிதனுக்குப் பட்டினி நிலை எச்சந்தர்ப்பத்தில் உண்டாயிற்று?

(3) அவன் பயன்படுத்திய உணவுகள் எவை?

(4) வேட்டையாடிய விலங்குகளைப் பின்தொடர்வதற்கு அவனுக்கு உதவியாக இருந்தது எது?

(5) ஆதிமனிதனது படைக்கலங்கள் எவற்றால் ஆக்கப்பட்டிருந்தன?

**(5x2=10 புள்ளிகள்)**

**07) அ) பின்வருவனவற்றுள் மூன்றினைத் தெரிவுசெய்து கருத்துள்ள வாக்கியம் எழுதுக.**

1. பளபள
2. வள்ளல்
3. அறிவுக்கடல்
4. கரடுமுரடு
5. வெள்ளிடை மலை போல

**(3x2=06 புள்ளிகள்)**

ஆ) வழு நீக்கி எழுதுக.

ஔவையாருடைய காதில் அந்த நல்லவருடை புகல் விழுந்தது. நல்ல மணிதர்கள் எங்கோ இருந்தாலும் அவர்களைத் தேடிச் சென்று பார்த்துப் பாராட்டுவது அந்தப் பெருமாட்டியின் இயள்பு.

**(15 புள்ளிகள்)**



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457